உ

கணபதிதுணை.

# திருச்செந்திற்பதிகம்.

---

இஃது,

பிறையாறு,

ந. வடிவேல்நாடாரால்

இயற்றப்பட்டு,

திருப்பத்தூர் :

சின்னையநாடார் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

---

விக்ருதி௵ சித்திரை௴.



உ

கணபதிதுணை.

# சாற்றுக்கவிகள்.

சேற்றூர்ச் சமத்தான மகாவித்துவான்
ம-ள-ள-ஸ்ரீ இராமசாமிக்கவிராயரவர்கள்
குமாரர்,
கந்தசாமிக்கவிராயரவர்களால்
இயற்றப்பட்டது.

உருவளிகா மணிமாத ராடகமுற்
றிடுநலத்தா னம்பனூர்நேர்
தருவளிவா னகமணொலி நிறைந்தவெறும
புதுக்குடியூர்ச் சாசராசன்
சருவசியா டம்பரன்மா மகராசன் பாரசா
தவனும் பண்பாற்
பொருவளியாங் கட்சசிம ஞானவிசர்
கவிஞர்மால் புதல்வனுமேனன். (க)

மாவனமன் டயிராணி மலன்பாண்மை
படித்திருக்கு மாட்சியாலே

மாவணமன் டயிராவ தத்துவலா
ரிமையிவனு மாளுஞ்சிரால்
மாவணமன் டருகினிய கனியளிக்கும்
பிறைசைநகர் வாழ்வோன்கைய
மாவணமன் டலிசர்குழு வதற்கிவனோ
சிம்மகிகர் வலிமைபூண்டோன். (௨.)

மதியான வத்தைதபுரா வெளர்க்கினிமை
காட்டோறுஞ்செய மனத்தன்றூய
மதியானா புதவசனத் தான்வாழ்வோன்
மணிப்பொழில் வளத்ததுத்த
மதியான்விருர செந்தூர்க் குமரன்மிசை
யொருபதிகம் வழுத்தினுள்சு
மனகற்பனை சொற்சுவைபொரபெசாத்
திரப்பொருளு மருவத்தாலே. (௩.)

நங்குமரப் பெருமான்மே லகர்விரு
ளகற்றிய நவில்வார்முன்னம்
மங்களமிகு மிக்கென்றும் புலவனையும்
பதிகமெனா வழுத்தும்வண்ணம்
பொங்குபத்திருளை யெவர் பொருங்கவிச்ச
விப்பதிகம் புகலும்பொற்பால்
தங்கவடி வேலெவுளும்பே ரினக்குமிகப்
பொருத்தமெனச் சொல்லுவேனே. (௪)

---

சுவாமிமலை ம-ள-ள-ஸ்ரீ,

## அப்பாசாமிபிள்ளையவர்கள்

இயற்றியது.

செந்தமிழ் செழிக்குஞ் செந்திலி னிதாய்த்
தேவதேவாதிகள்போற்றச்
சுந்தர மிருந்து விளங்கிடுங் கந்த
சுவாமியின் றிருவடிமீதில்
வந்தனை யாகப் பதிகமொன் றியற்றி
வையக மகிழ்ந்திடத்தந்தான்
சந்தமார் வடிவே லெனப்பெயர் கொண்ட
சகலகற் கலையுணர்தவத்தோன். (க)

---

பவானி பண்டிதர் ம-ள-ள-ஸ்ரீ,

சௌந்தரபாண்டிய ஒதுவாமூர்த்திகள்

இயற்றியது.

மணியம ருகற்கு நின்றுமே வானை
வானிடைத் தாவுத றன்பால
நனிவொடு மேவிப் புனல்கவர்ந் தேகுஞ்
செல்வினைக் கடலெனு மரசன்
தணிவொடு வசியால் வெட்டுதல் போலுந்
தொல்வளத் திருச்செந்தின் மேவுங்
கணியமர் குமரன் றந்தையை வணங்கக்
கண்டுசற் குருவென விருந்தோன். (உ)

திசையெலாம் வணங்கத் தேசிகன் மீதோர்
திருப்பதி கத்தினை யன்பாய்
அகமெனு மானைக் கங்குச மெனவே
யறைந்தனன் சிறந்திடு மமுதாய்
தகவுறு மனையா னெவனெனிற் பிறைசைத்
தனிநக ராளயி னார்மால்
மகனெனும் வடிவே லெனும்பெயர் கொண்ட
மதிபசற் குணசிகா மணியே. (௨.)

---

பிறையாறு ம-ள-ள-ஸ்ரீ,

ப. குமாரசாமிநாடாரவர்களால்

இயற்றப்பட்டது.

யெறியு மணியிமைப்பிற் றினகரன்மித்
திரனணியத் திகழ்பேர் வாய்ந்த
ருவில்வளச் செந்திநக ராறுமுகத்
தேசிகன்றாட் புகழ்ந்து போற்றி
யொருபதிக வமுதளித்தா னுலகமதிப்
புலவரெலா முகந்துட் கொள்ள
மருவலருக் கரியனையான் றண்ணளியான்
வண்கொடையான் வடிவே லென்பான்.

சாற்றுக்கவிகள்

முற்றிற்று.

---



உ

கணபதிதுணை.

# திருச்செந்திற்பதிகம்.

## காப்பு-வெண்பா.

அத்துவிதச்சொல்லுணர்த்த வத்தமத்தகம்மருப்பென்
றித்தனையு மொத்தவத்தி யேற்றதலை—வைத்திருக்குஞ்
சீலக் கணபதியார் செந்திற் பதிகமதைக்
காலமுஞ்சீ ருற்றிடவே காப்பு.

## எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மணியினு ளொளியே மாமறைப் பொருளே
மாபலாக் கதலியின் ரசமே
அணிதிகழ் சோதிக் குன்றமே யெளியே
ஞானவங் கெடவரு மமுதே
பணியுனுஞ் சிறியி லவர்க்கருந் தேவே
பராபர மாகிய முதலே
கிணிமறை சிலைக்கோர சிற்றுளி யாகுஞ்
செந்திலா யருள்புரி யாயே. (க)

அரிமதி கடவா வாரலுக் கருகே
யார்ப்புட னத்தியி லிருந்து

பரியெனப் பாய்ந்து வருதிரை யின்னைப்
பரிசியா துடைந்துடைந் துறுதல்
சரிதைநற் கிரியை யோகிவை யாம்சா
யுச்சியஞ் சார்வுற நினைப்போர்
திரிபிறப் பிறப்பே போலுநன் ஞானஞ்
செந்திலா யருள்புரி யாயே. (௨)

கற்றிடும் படிப்பா லடியவ ருறவாற்
கன்மனப் பந்தமற் றிடுமோ
பெற்றவர் மீது பேதையேன் மனமும்
பித்தடைந் தலையுமென் செய்கேன்
சொற்றவா மனதை யருளினாற் பிடித்துக்
கொடுஞ்சிறை யாகமென் னறிவிற்
ஒ[illegible]க லேனும் வைத்திடு வெப்பேன்
[illegible]ந்திலா யருள்புரி யாயே. (௩)

அத்தமும் வேண்டே னிலத்தையும் வேண்டே
னாயிழை யாரையும் வேண்டேன்
சித்திணை வேண்டேன் பாக்கினை வேண்டே
னிமல மாகிய நின்னைச
சுத்தமா யிருந்து மும்மல நீங்கிச்
சோதியுட் சோதிசேர்ந் ததுபோல்
சித்தனே கலக்க வேண்டினே னருளைச்
செந்திலா யருள்புரி யாயே. (௪)

எங்கனு நிறைந்த சோதியேயியங்கு
மிரண்டுகொண் மறந்திடா தவர்க்குச்
சங்கனி முழவு பேரிகை வாரி
சலதரம் பலவித நாதம்
அங்கமு மகமுந் தழலினே ருற்ற
வரக்கென வுருகவா னந்தஞ்
செங்கைவே லவனே தங்குமே யெனக்குச்
செந்திலா யருள்புரி யாயே. (௯)

மனமுதற் கரணம் பிறந்திடும் வெளியே
மதியினுக் கெட்டிடா வழுமேக
னவுதிப் பதன்முன் னிலங்கிய சுடரே
நாலுவாக் கவிர்க்கிடும் பரனே
அனகனே யபயங் கூறினேன் காவ
லனைவிடா தாதரித் தன்பாய்த்
தினமிரு பதமு மறந்திடா திருக்கச்
செந்திலா யருள்புரி யாயே. (௰)

பத்தியிற் றவர்க்கு முத்தியை யளிப்பாய்
பாவியேற் கைக்கியார் கொடுத்தாய்
பித்தரு ளகனென் றிகழ்பவ ரில்லைப்
பெருப காரியென் றுரைப்பார்
கத்தியே பதருக் ககங்கொளு நின்று
கலங்குவார் காட்சியை யின்றித்

தித்திரி காட்டும் வளமிகு மெழிலார்
செந்திலா யருள்புரி யாயே. (௭)

நீண்டமா நகர்க்கு வேந்தனாயிருந்து
நினைப்பிறக் கரியவா னந்தம்
பூண்டதாய் நினைந்து மொழிந்ததோ வாசை
பூதல நினைவலா தன்றோ
ஆண்டொ வென்றார்க் கிறைவனை புரக்கு
மையனே யாசையைக் கொடுத்துத்
தீண்டிடா திருக்க நமனையுந் தடிந்து
செந்திலா யருள்புரி யாயே. (௮)

பாலக னாகுஞ் சேவக னாகும்
பரனையும் பரிப்பவன் பாலா
[illegible]ர் மாலை [illegible]வலர் மாலை
நாளுமே யணிக்கிடு நாதா
தாவரு மவிழுந் திவருமயி லுந்
சன்றாக[illegible] [illegible]ளையுங் காணத்
தேவரும் பணியுப் பலருங் பணியுஞ்
செந்திலா யருள்புரி யாயே. (௯)

அந்தியா [illegible] வேசிதுக் காசை
யதிக [illegible] யதனால
பந்தையர் [illegible] லெனப்பெயா ரளித்தா
லொழு[illegible] விட லாமோ

கந்தனே முருகா கங்கையின் பாலா
கடம்பனே பன்னிரு கையா
சந்தருந் துறைவாய் நனவினிற் கருத்தி
செந்திலா யருள்புரி வாயே. (௧௦)

## திருச்செந்திற்பதிகம்

முற்றிற்று

